## உள்ளே


1) பிறர் பொருள் எட்டி

2) தாயன்பு

3) சிவநெறி

4) மானம்

5) விளக்கு




# 1. பிறர் பொருள் எட்டி

ஆன்மாக்களாகிய நாம் எண்ணில் கோடி காலமாக இறப்பதும் பிறப்பதுமாகப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து உழல்கின்றோம். இந்த பிறவித்துன்பத்தை அகற்றி முத்தி இன்பத்தை நாம் பெற வேண்டும்.

‘‘எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
என திடர்பிறவி அவதாரம்’’
என்கின்றார் அருணகிரிநாதர்

பிறவித் துன்பம் எதனால் உண்டாகின்றது? என்று தெளிதல் அறிவுடைமை பிறவிப்பிணியினால் வாடி வருந்துகின்ற நாம் அந்த நோய்க்கு காரணத்தை கண்டுபிடித்து அந்த மூலத்தை களைய வேண்டும்.

‘‘நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்’’
என்கின்றார் திருவள்ளுவர்

ஒருவனுக்கு வந்த நோய்க்கு மருந்து உண்ணக் கூடாது அந்த நோய் எதனால் வந்தது என்று கருதி அந்த மூலத்தை களைய மருந்து உண்ணுதல் தான அறிவுடைமையாகும்.

பிறவித் துயரம் பற்று அவா என்ற இரு குற்றங்களால் விளைகின்றது.

பற்று—தன் பொருளில் வைக்கும் விருப்பம்
அவா—பிறர் பொருளில் வைக்கும் விருப்பம்
அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பீனும் வித்து என்பது பொதுமறை

அவரை துவரை முதலிய விதைகள் சிலர் தூவினால் தான் நன்றாக விளையும்—கைராசி என்பர். ஆனால் இந்த அவா என்ற விதை யார் தூவினாலும் முளைக்கும். மற்ற

RangaRakes tamilnavarasam.com

விதைகள் அந்த அந்த விதைகள் விதைப்பதற்குரிய காலத்தில் தூவினால்தான் முளைக்கும். ''ஆடி பட்டம் தேடி விதை''—என்பர். ஆனால் இந்த அவா என்ற விதை எந்தக் காலத்திலும் முளைக்கும். இதற்கு கால வரம்பு இல்லை.

நெல், கொள், முதலிய விதைகள் தூவினால் 100க்கு 90 முளைக்கும் 10 முளைக்காமல் போகும். இந்த **அவா** என்ற விதை 100க்கு 100ம் முளைக்கும். அம்மம்ம !! இது எத்துணை பயங்கரமாக உளது. எண்ணுங்கால் ஏக்கம் உண்டாகின்றது. திருவருளாலும் குருவருளாலும் **பற்று அவா** இரண்டையும் அகற்றி பிறவித் துயரத்துக்கு முற்று புள்ளி வைக்கவேண்டும்.

முதலில் பிறர்பொருளில் வைக்கும் அவாவை அகற்ற வேண்டும். பின்னர் தன் பொருளில் வைக்கும் பற்றை அறவே அகற்ற வேண்டும்.

**''பற்றவா வேரொடு பசையறப் பிறவிபோய்**
**முற்றவால் உணர்வு மேல் முடுகினார்''**

**—கம்பர்**

**பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும்**

**—திருக்குறள்**

**''அற்றது பற்றெனில் உற்றது வீடு''**

**—நம்மாழ்வார்**

இந்த ஆன்றோர்களின் அமுத வாக்குகளைச் சற்று சிந்தியுங்கள். **உற்று உணருங்கள்** ஆன்றோரின் அருள் வாக்கு அமுதம் போன்றது, நமக்கு நலம் பயப்பது. ஆன்றோரின் சொல் நமது அல்லலை யகற்ற வல்லது. **அவா** பிறப்பையுண்டாக்கும்.

1. குபேரன் சிவபெருமானுடன் தென்னாட்டில் விளங்கும் சிவஸ்தல யாத்திரை புரிந்தான். காவிரிநதி கடலுடன் சேரும் காவிரிப் பூம்பட்டினத்தையடைந் தான். அங்குள்ள **பல்லவனீச்சுரம் சாயாவனம்** என்று புகழ்பெற்ற இரு சிவாலயங்களை தரிசித்து வழிபட்டான்.



அங்கே இயற்கையழகும் செயற்கை வனப்பும் ஒருங்கே இணைந்து விளங்கும் காட்சியைக் கண்டு இங்கே இன்னும் இரண்டு நாள் இருந்து மகிழலாம் என்று எண்ணினான். எண்டோள் ஈசன் எண்ணுகின்ற எண்ணத்தில் இருக் கின்றான். குபேரனை பார்த்து ''ஒரு எண்ணம் ஒரு பிறப்பை தரும் நீ இங்கு இருந்து மகிழ எண்ணினாய் ஆதலால் இத்தலத்திலேயே பிறந்து வாழ்ந்து வரு வாயாக'' என்று கட்டளையிட்டுக் கயிலைமலை சென்றார். குபேரன் காவிரிப்பூம்பட்டணத்தில் **சிவநேச குப்தருக்கும் ஞானகலைக்கும்** மகனாகப்பிறந்து **திருவெண்காடன்** என்ற பேருடன் பிறந்தான். இவர் தான் பரமஞானியாகிய **பட்டினத்தடிகள்.** ஒரு எண்ணம் ஒரு பிறப்பைத் தந்தது என்றால் நாம் எண்ணுகின்ற எண்ணங்கட்கு எத்தனை பிறவி எடுக்கவேண்டுமோ ?

**ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல**

**—திருக்குறள்**

2. மஹா பிஷக் என்ற ஒரு மன்னவன் இருந்தான். அவன் 1000 அசுவமேதயாகங்களும் 100 ராஜசூய யாகங்களும் செய்தான். கோடிக் கோடியாக தான தருமங்களைச் செய்தான். அப்புண்ணியத்தால் பிரம தேவருடைய அருகில் அமரும் பெரும் பேற்றைப் பெற்றான்.

ஒரு நாள் பிரம தேவரை வணங்கும் பொருட்டு தேவர்களும் தேவமாதர்களும் சித்தர்களும் முத்தர்களும் வந்து குழுமினார்கள். அந்த குழுவில் கங்கா தேவியும் வந்தாள். காற்றினால் கங்கையின்மேல் ஆடையானது சிறிது விலகிற்று அங்குள்ள தேவர்கள் நிலம் நோக்கி னார்கள். மஹாபிஷக் என்ற மன்னவன் கங்கா தேவியின் திருமேனியின் நலம் நோக்கினான்.

பிரமதேவர் ! மஹாபிஷக்கே ! கங்கை தேவமாதா. அவளுடைய நலம் நோக்கிய குற்றத்தால் நீ மண்ணுலகில் பிறந்து சிலகாலம் கங்கையுடன் வாழ்ந்து வருவாயாக என்றார். பிரம லோகத்தில் இருந்து ஒரு பெண்ணை

RangaRakes
tamilnavarasam.com

உற்றுப் பார்த்த பிழைக்கு அங்கிருந்து மண்ணில் பிறந்தான் என்ருல் நாம் மண்ணுலகில் இருந்து பிழை செய்தால் எங்குபோக நேருமோ ? சிந்தியுங்கள்.

அந்த மகாபிஷக் என்ற புண்ணிய சீலன் மண்ணுலகில் சந்திர குலத்தில் பிரதீபன் என்ற மன்னனுக்கு மகனுகப் பிறந்து **சந்தநு** என்று பேர்பெற்று கங்கையுடன் வாழ்ந்து காங்கேயன் என்ற **பீஷ்மரைப்** பெற்ருன். ஒரு பார்வைக்கு ஒரு பிறப்பு வந்தது.

3. மாலயனுதி வானவர்களால் நெருங்க முடியாத அதிபயங்கரமான ஆலகால விஷத்தை நாவல் பழத்தைப் போல் திரட்டி உருட்டிச் சிவமூர்த்தியிடம் தந்த பேராற்றல் படைத்தவர் **ஆலால சுந்தரர்.**

அவர் ஒருநாள் நந்தன வனத்தில் உமா தேவியாரின் சேடியர்களாகிய **கமலினி, அனிந்திதை** என்ற இருவரை ஒருகணம் விரும்பிப்பார்த்தார். அதனுல் மண்ணுலகில் திருநாவலூரில் **சடையனுருக்கும் இசைஞானியாருக்கும்** மகனுகப் பிறந்து ஆரூரன் என்ற பேருடனும் கயிலேயில கன்று அந்த இருவரும் மண்ணுலகில் பிறக்க, அந்த பரவை யார், சங்கிலியார் என்பவர்களுடன் வாழ்ந்து பின் கயிலேமலே சென்ருர் என்ற வரலாற்றை மறக்கலாகுமா ?

ஆலால சுந்தரர் போன்ற மகான்களுக்கு இவ்வாறு பிறப்பு வந்தது என்ருல் நாம் எந்த மூலே ? நமக்கு எத்தனைப் பிறப்பு வருமோ ? யாராவது அதுபற்றிக் கவலேயாவது படுகின்ருர்களா ? கல்லுப் பிள்ளேயார் மாதிரி கலங்காமல் இருக்கின்ருேமே ? நமது அருமை பெருமை எத்துணை விழுமியது ?

ஆதலால் துன்பத்திற்கு மூலகாரணமாகிய '' **அவாவை** '' அறுக்க வேண்டும் பிறருடைய பொருள் களேக் கண்டால் எட்டிப் பழம் போல் கசக்கவேண்டும். பிறர் பொருள்களேக் கண்டால் இனிக்கின்றதல்லவா ? இது பெரும்பிழை. இதனுல் பிறப்பு எய்தும்.

மகாபாரதத்தில் ஆரண்ய காண்டத்தில் பழம் பொருந்து சர்க்கம் என்ற ஒரு பகுதியுளது.



'' **உற்றது உரைத்தால் அற்றது பொருந்தும்** '' என்ற பழமொழிப்படி நெல்லிக்கனி மீண்டும் தனது கோப்பில் பொருந்தும் பொருட்டு பாண்டவர்கள் ஐவர்கட்குத் தங்கள் உள்ளத்தில் உள்ள உண்மைக் கிடைக்கையை கூறுமாறு கண்ணபிரான் கட்டளேயிட்டருளினுர்.

அப்போது பீமசேனன் கூறிய நல்வசனம் மிக உயர்ந்தது. '' கண்ணு '' மணிவண்ணு ! பிறருடைய மனேவியர்களேக் காண நேர்ந்தால் என்னேப் பெற்ற குந்தி தேவியைப்போல் பார்க்கின்றேன் ! பிறருடைய பொருள்களேக் கண்டால் எட்டிக் கனிபோல் எனக்குக் கசக்கின்றது. பிறர்களுடைய குற்றங் குறைகளே நான் உற்றுப்பார்ப்பதே கிடையாது பிறருடைய துயரத்தை என் துயரமாகக் கருதி உதவிசெய்ய என் உள்ளம் விரும்பு கின்றது. என் உயிருக்கு இறுதியேவரினும் இந்த நான்கு கொள்கைகளேக் கைநழுவ விடமாட்டேன் ! இறுதிவரை உறுதியுடன் இருப்பேன் என்று வீமசேனன் கூறினுன்.

**பிறர்மனே யவரைப் பெற்ற தாயேனவும்**
**பிறர் பொருள் எட்டியே எனவும்**
**பிறர்வசை யுரைத்தல் பெருமையன் றெனவும்**
**பிறர்துயர் என்துயர் எனவும்**
**இறுதியே வரினும் என் மனக்கிடக்கை**
**எம்பிரான் இவை யென மொழிந்தான்**
**மறலியு மடியு மாறுமல் லியற்கை**
**வலிமை கூர் வாயுவின் மைந்தன்**

இந்த இடத்தில் பீமனுடைய உள்ளத்தின் உயர்வு தெற்றெனத் தெரிகின்றது அல்லவா ?

பிறருடைய உடைமை உயிருள்ள பொருளோ நமக்கு எட்டிக் கனி போல் கசக்க வேண்டும். பிறர் பொருளே விரும்புதல் கூடாது. இதுதான் பிறவிப்பிணியை மாற்றும் மார்க்கமாகும்.

பிறருடைய பொருளேத் தற்காலிகமாகப் பயன் படுத்திக் கொண்டால் அதுவும் பிறவியைத் தரும்.

இந்த உண்மையை அடியில் வரும் வரலாறு உணர்த்து கின்றது.

RangaRakes
tamilnavarasam.com

இராஜபுரம் என்ற நகரில். ''சங்கிலி'' என்ற பெயருடைய ஒருவன் வாழ்ந்தான். அவன் செருப்பு தைக்கும் சக்கிலியர் குலத்தில் பிறந்தவன். செருப்பு தைக்கும் தொழிலுடன் நகரில் பறையறையும் அரசுப் பணியையும் மேற்கொண்டிருந்தான். செல்வ செழிப்புடன் இனிது வாழ்ந்தான்.

அவனுடைய வீட்டில் கட்டில் இருந்தது. தொட்டில் இல்லை. அதனால் மிகவும் வேதனையடைந்தான். பலப்பல தானதருமங்கள் செய்தான். சஷ்டி விரதம் பிரதோஷவிரதம் முதலிய விரதங்களையும் அனுஷ்டித்தான். அடிக்கடி தன் ஜாதகத்தைப் பார்த்து தனக்கு மகப்பேறு கிடைக்க என்ன மார்க்கம் என்று விசாரிப்பான். ஒரு பெரியவர் அவனைப் பார்த்து ''மூவாசையும் அற்ற முனிவர் ஒருவருடைய ஆசியினால் உனக்கு மகப்பேறு கிடைக்கும்'' என்று கூறினார்,

அந்த உத்தமமான குணசீலன் பரமஞானி எங்கே என்று ஆராய்ந்தான். அந்த நகருக்கு அருகில் உள்ள சோலையில் ஒரு பிராமண முனிவர் உலாவிக்கொண்டிருந்தார். அவர் பற்றற்ற பரமஞானி. யாரிடத்திலும் எந்த பொருளையும் விரும்பாதவர். பசிவந்தபோது காயோ கனியோ உண்பார். கால் போனவழியில் போவார். அவருடைய திருமுகத்தில் ஞானவொளி வீசும். அவருடைய கண்களில் கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

சங்கிலி இவரைக் கண்டு இவருடைய ஆசியைப் பெற விரும்பினான். கொடிய வெயில் நிலம் அனல் போல சுடுகின்ற காலம். அந்த மகான் மணற் பரப்பால் கொதிக்கின்ற ஒரு ஆற்றைக் கடக்க வேண்டி நடந்து சென்று கொண்டிருந்தார். சங்கிலி இரண்டே தோல்களால் தைத்த ஒரு அழகிய செருப்பைக் கொண்டு போய் அவருடைய திருவடிக்கு அருகில் வைத்தான். பற்றற்ற அப்பரமஞானி வெயிலின் கொடுமையைத் தாங்க மாட்டாதவராய் அந்த பாதரட்சையைக் காலில் மாட்டிக் கொண்டு ஆற்றைக் கடந்தார். கடந்தபின் உடையவன் உடமையை எடுத்துக் கொள்ளட்டும் என்று எண்ணி செருப்பைக் கழற்றி விட்டுச் சென்றார். சங்கிலி நாம்



இதனை மகானுக்கு தந்துவிட்டோம் இனி அதனை எடுத்துக் கொள்வது முறையன்று என்று எண்ணி அந்த செருப்பை எடுக்காமல் தன் இல்லம் சேர்ந்தான்.

சில காலத்துக்குப்பின் அந்த ஞானியின் ஆன்மா பிரிந்தது. இயமனுடைய பணியாளர்கள் அவரை பய பக்தியுடன் கொண்டுபோய் அறக்கடவுளுக்கு முன் நிறுத்தினார்கள். அறக்கடவுள் அவரை வணங்கினார் ''தவசீலரே! தாங்கள் பற்றற்ற பரமஞானி ஒருநாள் சங்கிலி என்ற சக்கிலியன் தந்த செருப்பை ஏற்றுக் கொண்டீர். அதனால் தங்களுக்கும் மீண்டும் ஒரு பிறப்பு எடுக்கும் தன்மை யுண்டாகியுள்ளது. அந்த சங்கிலி மகப்பேறு குறித்து வருந்துகின்றான். ஆதலால் தாங்கள் அந்த சங்கிலிக்கு மகனாக பிறக்க வேண்டும்'' என்றார்.

இதனைக் கேட்ட தவமுனிவர் தன் தலையில் கையால் மோதிக்கொண்டார். வெயிலின் கொடுமைக்காக— சிலநிமிஷம் அவன் தந்த செருப்பையணிந்து கொண்ட ஒரு செயலுக்காக ஒருபிறப்பு எய்தியதே என்று எண்ணி வருந்தினார். ''அறக்கடவுளே! நான் அவனுக்கு மகனாகப் பிறந்தால் **பிரமஞானம்** அகலாதிருக்க வரம்தாரும்'' என்றார். ''அப்படியே தாங்கள் பிறப்பெடுத்தாலும் பிரம நிஷ்டராக இருப்பீர்'' என்று அறக்கடவுள் கூறினார்.

அவருடைய ஆன்மா சங்கிலியின் மனைவியின் கருவில் சென்று கருவிலிருந்து மகவாகப் பிறந்தது. பிறந்த குழந்தை அழவில்லை. அது பிரமஞானத்துடன் விளங்கியது. தாய்ப்பால் பருகாது நிஷ்டானுபூதியுடன் திகழ்ந்தது.

இதனைகண்ட ஓரறிஞர் ''சங்கிலி! யாரோ ஒரு மகான் வந்து பிறந்திருக்கின்றார். இது தாய்ப்பால் அருந்தாமையால் பசுப்பால் கொடு என்றார்.

சங்கிலி ஒரு பசுவை நீராட்டி பால் கறந்து அம் மகவுக்கு பால் ஊட்டினான். பாலைப்பருகி அவர் சதா நிஷ்டானுபூதியில் இருந்து வந்தார், அம்மா! அப்பா

RangaRakes tamilnavarasam.com

என்று அழைப்பதில்லை. யாருடனும் பேசுவதில்லை. உலகுக்கு அப்பாற்பட்டு விளங்கினார். இவ்வாறு 12வயது நிரம்பினார்.

சங்கிலிக்கு குழந்தை பிறந்ததே என்று மகிழ்ச்சியிருந்தும், மற்ற குழந்தைகள் போல ஆடவும் பாடவும் இன்றி அம்மா அப்பா என்று அழைக்காமல் உலகை மறந்து இப்பிள்ளை இருக்கின்றதே" என்று எண்ணி வருந்தினான்.

ஒருநாள் சங்கிலி தன் மனைவியைப் பார்த்து பெண்ணே! நமக்கு குழந்தை பிறந்தும் பயன் இல்லாமல் இருக்கின்றது. இன்று நான் அரசு அலுவலருடன் அயலூர் போகவேண்டும். இன்று இரவு வீதியில் தமுக்கு அடிக்கும் பணி தடைபடுகின்றது. மகன் இருந்தும் பயன் இல்லை; என்று கூறி வருந்தினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட அவர் "இன்று இவனுக்காக நாம் தமுக்கு அடித்தால் செருப்புக்கடன் தீரும்; பிறவிப்பிணியும் தீரும்" என்று எண்ணினார். 12 ஆண்டுகளாக வாய்திறந்து பேசாத அம்மகான், "அப்பா! தாங்கள் வருந்தவேண்டாம் நான் இன்று இரவு சென்று அரசவீதியில் தமுக்கடிப்பேன் என்றார்" இந்த மணிமொழியைக் கேட்ட சங்கிலி ஆனந்த வெள்ளத்தில் அழுந்தினான். அப்பா என்ற குரல் அமுதம் போல் அவனுக்கு இனித்தது. ஆ! ஆ!! என்று ஆடினான் தனப்புதையல் கிடைத்த தரித்திரனைப்போல் மகிழ்ந்தான் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"மகனே" என்று அவரைத் தழுவிக்கொண்டான் நான் பெற்ற செல்வமே! உனக்கு தமுக்கடிக்க தெரியுமா? நான்கு ராஜவீதிகளிலும் அடிக்க வேண்டும். வீதிகளில் நன்றாக உரத்த குரலில் கூவி தமுக்கடிக்க வேண்டும்" என்றான்.

"அப்பா! தாங்கள் கவலைப்பட வேண்டாம். எல்லாம் இறையருளால் எனக்கு தெரியும்" என்று கூறியருளினார்.



இரவு 9 மணிக்கு சங்கிலி அரசு அதிகாரியுடன் அயலூர் சென்றான். இரவு 10 மணிக்கு அந்த பரமஞானி தமுக்கை கழுத்தில் மாட்டிக்கொண்டு அம்மா! நான் தமுக்கடிக்கப் போகின்றேன் எனக்கூறி விட்டு நகரத்திற்குள் சென்று கிழக்குராஜ வீதியில் நின்றார்.

அந்த நகரத்தை அறநெறி வழுவாது அரசு புரிகின்ற மன்னன் மிகவுயர்ந்த பக்குவ ஆன்மா! ஞானதாகம் உள்ளவன். குருநாதர் என்று கிடைப்பாரோ? பிறவிப்பிணி என்று தீருமோ? என்று விநாடிக்குவிநாடி துடித்துக் கொண்டிருப்பவன். அவன் அரண்மனையின் மேல்மாடியில் இருந்தான்.

## தவசீலர்

மகாஜனங்களே! நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நமக்குள் காமம், குரோதம், லோபம். மோகம், மதம், மாற்சர்யம் என்று ஆறுபகைவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நமது உடம்புக்குள் இருந்து **ஞானம்** என்ற ரத்தினத்தை அபகரித்துக் கொள்ளுவார்கள் ஆதலால் எச்சரிக்கை எச்சரிக்கை விழிப்பாக இருங்கள்.

**காம: குரோதஸ்ச லோபஸ்ச**
**தேஹே திஷ்டந்தி தஸகரா:**
**ஜ்ஞான ரத்னப ஹாராய**
**தஸ்மாத் ஜாக்ர ஜாக்ரத:**

என்று கூறி தமுக்கடித்தார். அரண்மனை மேல் மாடியில் இருந்து கேட்ட மன்னன் வியப்பு அடைந்தான். இந்த வேதாந்த வாக்கியத்தைக் கூறி தமுக்கு அடிக்கின்ற உத்தம ஞானியாரோ? என்று எண்ணி தென்புரமாக வந்து நின்றான்.

தென்மாட வீதியில் வந்து நின்ற தபோதனர் மகா ஜனங்களே! தூங்காதீர்கள் பிறப்பதும் துன்பம், கிழப்பருவத்திலும் துக்கம், மரணமடைவதும் துன்பம் மாறி மாறி துக்கந்தான் சம்சாரமாகிய கடலில் வீழ்ந்து

RangaRakes
tamilnavarasam.com

துயரமடைகின்றோம். ஆதலால் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள் விழித்துக்கொள்ளுங்கள். அஞ்ஞான இருளில் தூங்காதீர்கள்.

**ஜன்மம் துக்கம் ஜராதுக்கம்**
**ஜாயா துக்கம் புந : புந :**
**ஸம்ஸார சாகரம் துக்கம்**
**தஸ்மாத் ஜாக்ர ஜாக்ரத :**

இதனை அரண்மனைமீது இருந்து கேட்ட மன்னன் பரவசம் அடைந்தான். ஆனந்தகண்ணீர் வடித்தான். இனி அந்த குருமகான் என்ன உபதேசிப்பாரோ என்று எண்ணி மேற்குப் புரம் வந்து நின்றான்.

தபோதனர் மேற்கு ராஜவீதிக்கு வந்தார்.

மாயையாகிய இருளில் தூங்கி மோசம் போகும் மகாஜனங்களே ! நீங்கள் ஆசையாகிய கயிற்றால் கட்டுண்டு கிடக்கின்றீர்கள். பலப்பல எண்ணங்களை எண்ணி எண்ணி அவமே அழிகின்றீர்கள். உங்கள் ஆயுள்வீணே அழிகின்றது நீங்களும் அவமே அழிகின்றீர்கள், ஆகையால் எச்சரிக்கையாக இருங்கள் விழித்துக் கொள்ளுங்கள்.

**ஆஸயா பந்தே லோகே**
**கர்மணா பஹு சிந்தயா**
**ஆயு க்ஷீணம் நஜாநாஸ்தி**
**தஸ்மாத் ஜாக்ர ஜாக்ரத :**

இந்த உத்தம உபதேச மொழிகளைக் கேட்ட மன்னன் தெளிவு பெற்று முக்தி நலம்பெற வேண்டும் என்ற அதிதீவிரநிலை அடைந்தான்.

தவமுனிவர் வடக்கு ராஜவீதியில் நின்று ; நகரத்தில் வாழும் நன்மக்களே! தாயாரும் ஒரு காலத்தில் மாண்டு போவாள்: தந்தையும்மாண்டு போவான் ; உறவினரும் உடன் பிறந்தோர்களும் மாண்டு ஒழிவார்கள் செல்வம் அழிந்து போகும் நாம் அருமையாகப் புதுக்கிய வீடும்

RangaRakes



அழிந்து போகும் ; எல்லாம் நிலையற்ற பொருள்கள் இறைவன் ஒருவன்தான் என்றைக்கும் உள்ள பொருள். அப்பரம் பொருளை நாடி உய்வுபெறுவீர்கள்.

**மாதா நாஸ்தி ; பிதாநாஸ்தி**
**நாஸ்தி பந்து சகோதர :**
**அர்த்தம் நாஸ்தி : க்ரஹம் நாஸ்தி :**
**தஸ்மாத் ஜாக்ர ஜாக்ரத :**

மன்னன் இந்த அரிய உபதேசத்தைக் கேட்டும் உள்ளம் உருகினான். இன்னும் இந்த உத்தமர் என்ன உபதேசிப்பாரோ? என்று எண்ணி ஏங்கினான்,

தவமுனிவர் நான்கு ராஜவீதிகளிலும் தமுக்கடித்து விட்டு வீட்டையடைந்து நிஷ்டையில் அமர்ந்து விட்டார். மன்னன் அவருடைய உபதேச மொழிகளையே எண்ணிக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது. சங்கிலி அவசரமாகத் திரும்பி வீட்டை அடைந்தான் தன்மகன் தண்டோரா ஒழுங்காக அடித்தானோ? இல்லையோ என்று எண்ணி குழம்பினான். என் அருமை மகனே ! இரவு தண்டோரா அடித்தாயா ? என்று வினவினான். அவர் '' அப்பா ! நீங்கள் ஏன் கவலைப் படுகின்றீர்கள் நான் ஒழுங்காகத்தான் தண் டோரா போட்டேன் '' என்றார்.

சங்கிலி அரண்மனை சென்று அரசனை வணங்கினான் அரசன் '' சங்கிலி ! நேற்று இரவு தண்டோரா அடித் தது யார் ?' என்று கேட்டார்

சங்கிலி ''அரசரே அடியேன்தான் அடித்தேன் குற்றம் இருந்தால் மன்னியுங்கள். அபராதம் கட்டவேண்டும் என்றாலும் கட்டிவிடுகின்றேன் ''. என்றான்.

அரசன் ''சங்கிலி! குற்றம் ஒன்றும் இல்லை. பொய் சொல்லாதே. தண்டோரா நீ போடவில்லை வேரு ஒரு மகான் தமுக்கடித்தார் அவரை நான் வணங்கி வழிபட வேண்டும் அவர் எங்கிருக்கிறார் காட்டு'' என்றான்.

tamilnavarasam.com

சங்கிலி ''மன்னர் பெருமானே தண்டோரா போட்டது அடியேனுடைய தவப்புதல்வன். அவன் என்மகன் என்று பேர்தான் ; ஆனால் அவன் பரமஞானி சதா நிஷ்டையிலேயே இருப்பான்'' என்றான்.

அரசன் பல்லக்கை அனுப்பி அவரை மேளதாளத்துடன் அழைத்தான். அவருடைய பாத கமலங்களில் வீழ்ந்து வணங்கினான் குருநாதா! நேற்று இரவு தாங்கள் தமுக்கடித்து என்னை வாழவைத்தீர்கள் தாங்கள் இவனுக்கு மகனாகப் பிறந்த காரணம் யாதோ ? என்று கேட்டான்.

'' அன்பனே ! முற்பிறப்பில் பற்றற்ற பரம யோகியாக இருந்தேன், சுடுகின்ற மணல் நிறைந்த ஆற்றைக் கடக்கும் பொருட்டு இந்த சக்கிலியனாகிய சங்கிலி தந்த செருப்பைத்தரித்துக் கொண்டு ஆற்றை கடந்தேன். செருப்பையும் அங்கேயே ஆற்றங் கரையிலே விட்டு சென்றேன் அந்த செருப்பு கடனுக்கு மகனாகப் பிறந்தேன். நேற்று இரவு தமுக்கு அடித்ததனால் செருபபுக்கடன் தீர்ந்து விட்டது என்றார்.

அரசன் அவரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டான். சுவர்க்கத்திலிருந்து விமானம் வந்தது, தபோதனரும் அரசனும் விமானத்தின் மீது ஏறி சுவர்க்கம் அடைந்தார்கள்.

ஆதலால் பிறர் பொருளை எட்டியாகஎண்ணி பிறவித் துயரை களையவேண்டும்.

## 2. தாயன்பு

நம்மீது எத்தனையோ பேர்கள் அன்பு செய்கின்றார்கள், தந்தை அன்பு செய்கின்றார், மனைவி அன்பு செய்கின்றாள், மகன் அன்பு செய்கின்றான், உடன் பிறந்தார்கள் அன்பு செய்கின்றார்கள், ஆனால் தாய் செய்கின்ற அன்புதான் தலையாய அன்பு.

தாயன்புக்கு நிகரானது வேறு எதுவும் கிடையாது. தாய் நம்மை முன்னூறு நாள் சுமந்து, அங்கமெல்லாம்



நொந்து பெறுகின்றாள். தன் உதிரத்தைப் பாலாக மாற்றித் தருகின்றாள். கண்ணை இமை காப்பதுபோல் காத்து வளர்க்கின்றாள்.

நமக்கு இரண்டு தாயார் உண்டு. ஒன்று பெற்றதாய் மற்றொருதாய் இறைவன். தாய் இந்த உடம்பைப் பெற்றவள்; இந்த பிறப்புக்கு மட்டும் தாய்.

இறைவன் பிறவிகள்தோறும் நமக்கு உதவுகின்ற தாய், அதனால் இறைவனைத் தாய் என்று கூறுகிறார் மாணிக்க வாசகர்.

**'' தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ ''**
**'' தாயில் சிறந்த தயாவானதத்துவனே ''**
**'' எவ்வுயிர்க்குந் தாயானானை ''** —**பெரியபுராணம்**
**'' எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ ''** —**கந்தரநுபூதி**

நம்தாயாரைத் தங்க ஊஞ்சலில் வைத்துப் போற்றிப் பாலும் தேனும் ஊட்டி, மலர் மாலை சூட்டி வழிபட்டாலும், தாயார் நம்மை ஒருநாள் வளர்த்ததற்கு இணையாகாது.

சந்நியாசம் பெற்ற ஒருவனைக் கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்காதிருந்தால் தந்தைக்கு நரகம். சந்நியாசம் பெற்ற ஒருவன் தாயாரைக் கண்டு நிலத்தில் வீழ்கவில்லையானால் அந்த சந்நியாசி நரகத்தை அடைவான்.

பற்றற்ற பரமஞானியும் தாயாரைப் போற்ற வேண்டும்.

சந்நியாசம் பெற்ற ஆதிசங்கரரும், பட்டினத்து சுவாமிகளும் தாயாருக்குத் தகனகிரியை செய்தார்கள்.

தாய்தான் சிறந்த தெய்வம், தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள் யென்று யட்சப்ரச்னை கூறுகின்றது.

''ஈன்றாளில் என்னகடவுளும் இல்லை'' என்பது நான்மணிக்கடிகை. இத்தகைய தாயன்பை அடியிற்கண்ட வரலாறு இனிது விளக்குகின்றது.

வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்வானாகப் பேரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்பும் எய்தி

RangaRakes
tamilnavarasam.com

''ஸ்ரீ ஹீரன்'' என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர். இவர் அரச சபையில் சூரியனைப்போல் விளங்கினார். அவருடைய வாக்கின் வன்மையைக் கண்டு மன்னன் மகிழ்ந்து அவருக்கு பல விருதுகள் வழங்கினார்.

ஒருநாள் அயல்நாட்டிலிருந்து ஒரு புலவன் வந்தான். கையில் யாளிமுகத் தோடாவும், வைரக் கடுக்கனும், நவரத்தின மோதிரங்களும், பொற்சரிகைப் போர்வையும் உடைய அப்புலவன் சீடர்கள் பலர்சூழ மிடுக்குடன் தோற்றமளித்தான்.

அப்புலவனுக்கும் ஆஸ்தான வித்துவானாகிய ஸ்ரீ ஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது. அதில் ஸ்ரீ ஹீரன் தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை அவருக்கு சிந்தாமணி என்ற மகாமந்திரம் தெரியும். அம்மந்திரம் சரஸ்வதிக்கு உரியது. அதனைப் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல் நடு இரவில் பிணத்தின் மீது அமர்ந்து அச்சம் இன்றி பன்னிரெண்டு நிமிஷம் ஜெபித்தால் கலைமகள் காட்சி தருவாள். அவருக்கு ஸ்ரீ ஹர்ஷன் என்ற ஒரு சிறிய குழந்தை இருந்தது.

அந்த மந்திரத்தை அந்த சின்னஞ்சிறு பாலகனிடம் ஒப்புவிக்கவேண்டும் என்று கருதினார். மந்திரத்தை உபதேசிக்க கூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன்மனைவி மாமல்ல தேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

''பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச்சிறந்த அருமையும் பெருமையும் உடையது. இதனை நமது மகன் ஸ்ரீ ஹர்ஷனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய். இம்மந்திரத்தை பயபக்தியுடன் பன்னிரண்டு ஆண்டு ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இல்லையேல் நள்ளிரவில் பிணத்தின் மீது அமர்ந்து சிறிதும் அச்சமும் அருவருப்பும் இன்றி பன்னிரண்டு நிமிஷங்கள் ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இது கிடைத்தற்கரிய அரியபொக்கிஷம், இதனை மகனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கூறினார்.



பின்னர் ''மானம் இழந்த பின் வாழாமை முன் இனிது'' என்ற வாக்கின் படி அவர் உயிர்துறந்தார். மனைவி மாமல்லதேவி கணவனுருடைய பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்தினாள். மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர் தாங்கிக் கொண்டிருந்தாள்.

சிறிது குழந்தைக்கு வயது வந்தபின் அம்மந்திரத்தை அக்குழந்தைக்கு உபதேசித்தாள். அம்மந்திரத்தை சதா உச்சரிக்கும் பயிற்சியை அக்குழந்தைக்குத் தந்தாள், தன் மகன் பன்னிரெண்டு ஆண்டுகள் ஜெபித்தால்தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்? அத்தனை நாள் தாமதிக்காமல் அதிவிரைவில் அன்னை கலைமகளின் அருளைத் தன் அருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒருநாள் இரவு 15 நாழிகை நள்ளிரவு, தன் வீட்டுக் கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக் கொண்டாள். மகனை மார்புமீது வைத்துக்கொண்டாள் கண்ணு உனக்குச்சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக்கொண்டே இரு. அப்படிச்சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு நிரம்ப பட்சணம் தருவேன். விளையாட்டுச்சாமான் வாங்கித் தருவேன்'' என்றாள். அவள் இட்ட திட்டத்தை குழந்தை அறியாதுதானே? தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஹர்ஷன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக் கொண்டிருந்தான்.

தாய் விளக்கை அணைத்தாள். முன்னமேயே படுக்கைக்குள் ஆயத்தமாக வைத்திருந்த வடிவாளை எடுத்துத் தன் தலையைத் துண்டித்துக் கொண்டாள். குழந்தை இதை அறிந்துகொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்து கொண்டேயிருந்தது. நள்ளிருளில் பிணத்தின் மீதிருந்து மந்திரத்தை ஜெபித்ததால் கலைமகள் அன்னவாஹனத்தில் தோன்றி ஆயிரம் சந்திரோதயம் போல் காட்சி அளித்தாள்.

அந்த அருள் ஒளியில் வாணிதேவியை குழந்தை தரிசித்தது. அதே நேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டிருக்கக் கண்டது. இந்தத்தாயைநோக்கி

★

RangaRakes

tamilnavarasam.com

அழுவதா? அந்தத்தாயை நோக்கித் தொழுவதா? என்று எண்ணித் திகைத்தது.

கலைமகள் அக்குழந்தைக்குப் பூர்ணமான அருளை வழங்கி கலை ஞானத்தை தந்தருளினாள். ஸ்ரீ ஹர்ஷன் கலைமகளை நோக்கி ''அம்மா! என் தாய் பிழைக்க அருள் செய்'' என்று தொழுது அழுது வேண்டினான். வாணி தேவி அருள்புரிந்தாள் மாமல்லதேவி உயிர் பெற்று எழுந்தாள்.

ஸ்ரீ ஹர்ஷன் வடமொழியில் பெரும் புலவராக விளங்கினார். இவர் நளனுடைய சரிதத்தை 'நைஷதம்' என்ற நூலாகப் பாடினார். அதுமிகவும் கடினமாக எளிதில் பொருள் விளங்காதபடி இருந்தது. அக்காலத்திலிருந்த புலவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஸ்ரீ ஹர்ஷனுடைய அறிவு மிகவும் கூர்மையாக இருந்தது. அவரால் எளிமையாக பாட இயலவில்லை புலவர்கள் அவரைப் பார்த்துத் '' தங்களுடைய அறிவின் கூர்மை சிறிது மழுங்க வேண்டும். அப்படி மழுங்குவதற்கு நீர் திருமணம் செய்து கொள்ளவேண்டும். மாமனார் வீட்டில் சிலகாலம் இருக்கவேண்டும். காலையில் எருமைத்தயிர் அன்னம் சாப்பிட.வேண்டும். அவரைப் பந்தலின் கீழ் இருக்கவேண்டும் '' என்று கூறினார்கள்.

ஸ்ரீ ஹர்ஷர் இவற்றை இவ்வாறு செய்து அறிவின் கூர்மையை மழுக்கிக் கொண்டு இரண்டாவது முறையாக நைஷதத்தைப் பாடினார். அப்படி பாடிய நைஷதமே மிகவுயர்ந்த காவியமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. '' நைஷதம் புலவருக்கு ஔஷதம் '' என்று பழமொழி.

இந்த வரலாற்றினால் தாயன்பு நன்கு புலனாகிறது. தன் மகனுக்காகத் தாய் தன்னையே தியாகம் செய்துக் கொண்டாள்.



# 3. சிவநெறி

அகில உலகங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ஒன்று தானே அறிகின்ற பொருள்; மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள்; அறிவித்தாலும் அறியாத பொருள் மற்றொன்று. இவற்றை பதி, பசு, பாசம் என்று நம் சைவ சமய ஞான நூல்கள் கூறுகின்றன.

**பதி :** தானே அறிகின்ற பொருள்.

**பசு :** அறிவித்தால் அறிகின்ற பொருள்.

**பாசம் :** அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள். இறைவனும் அநாதி; ஆன்மாக்களும் அநாதி ''பதியினைப்போல் பசு பாசம் அநாதி'' என்கின்றார், திருமூலர்.

ஆனால் இறைவன் இன்ப வடிவினன் ; ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித்துன்பத்தை நுகர்கின்றன.

''சதாபாரதா துக்க பவான் தீனபந்தோ'' என்று சுப்ரமண்யபுஜங்கத்தில் சங்கரரும் கூறுகின்றார்.

ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குதற்குத் திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனிதாங்கி, ஆன்மாக்களுக்கு உடம்பையும், கருவிகரணங்களையும் உலகங்களையும் படைத்துக் கொடுத்தருளினார்.

அவ்வாறு படைத்த எழுவகைப் பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

''அரிது அரிது மானிடராதல் அரிது'' —ஔவையார்.

''எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்'' என்கின்றார் தாயுமானார்.

எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறி மாறி வந்து இளைப்புற்றேன் என்கின்றார் மணிவாசகர்

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்துணையென்று அறுதியிட்டுக் கூறினும் கூறிவிடலாம், ஆனால் நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிடமுடியாது என்கின்றார் அருணகிரிநாதர்.

RangaRakes
tamilnavarasam.com

''எழுகடல் மணலை அளவிடினதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்'' —திருப்புகழ்

ஒவ்வொரு பிறவியிலும்*நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டினால் பாற்கடல் சிறிதாகிவிடும் என்கின்றார் குருநமசிவாயர்.

எடுத்தபிறப் பெல்லாம் எனக்கு வந்த தாய்மார்

கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டின்-அடுத்து வரும்
பன்னு கணைத்துயிலும் பாலாழி யுஞ்சிறிதாம்
மன்னு சிதம்பரதேவா. —சிதம்பரவெண்பா

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது என்றோம்.

மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள்.

மன் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன், நினைக்கின்ற கருவி மனம். அது இன்றியமையாத ஒன்று. மற்ற பிராணிகட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன். வடமொழியில் மநுஜா. ஆங்கிலத்தில் மேன். இச்சொற்கள் யாவும் மன் என்ற பெயர்ச்சொல்லிலிருந்து தோன்றியவை.

மனம் என்ற கருவியில்லாமையால் விலங்குகளின் வாழ்வு ஒன்றுபோல் அமைந்திருக்கின்றது. மாடு அன்று உண்ட புல்லைத்தான் இன்றும் உண்ணுகின்றது. மனிதன் உணவைப் பல்வேறு வகையாகப் பக்குவஞ்செய்து உண்ணுகின்றான்.

குருவி அன்று கூடுகட்டியது போல்தான் இன்றும் கட்டுகின்றது. மனிதன் வீடுகட்டும் முறை கணத்துக்குக் கணம் பல்வேறு விதமாக முன்னேற்றமடைந்திருக்கின்றது.

உணவினாலே, உடையினாலே, நடையினாலே, பேச்சாலே, எழுத்தாலே, வாகனங்களினாலே மனிதன் முன்னேற்றமடைகின்றான்.

இதனை இதனை இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றான்.

இவ்வாறு சிந்திக்கின்ற மனிதன் சமயநெறியிலும் முன்னேறவேண்டும்.

நான் யார்? இந்த உடம்பு எப்படி வந்தது? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன்பொருட்டுத் தந்தானா? உடம்பு எடுக்குமுன் எப்படி நான் இருந்தேன்? எதற்காக உடம்பு தரப்பட்டது? எதன்



பொருட்டு வந்தேன்? எங்கே போகவேண்டும்? நான் எங்கே போய்க்கொண்டிருக்கின்றேன்? என்பனவாறு சிந்தனைகள் சிந்திக்க வேண்டும். இந்தச்சிந்தனைகள் தாம் சிந்திக்கத்தக்கவை. இவைகளைச் சிந்திக்கின்றவன் உண்மையில் மனிதனாகின்றான். இந்தச் சிந்தனையில்லாதவர்களைச் சிந்தித்தும் பரமகுருநாதராகிய அருணகிரிநாதர் பாடுகின்றார்.

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்வா [கனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை [சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே.

ஏனைய சிந்தனைகள் பிறவியைத் தரும். அச்சிந்தனைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும்.

**பஞ்சாக்கரத்தில் பல பிரிவுகள் உண்டு**

''ஐம்பத்தொன்றி லெட்டாரில் மூன்றினில் ஐந்தில் தங்கும் அப்பாலை வான்பொருள்''
என்பது திருவகுப்பு.

மூன்று என்பது திரியட்சரம். இதைப் பரமஞானிகள் ஓதுவார்கள்.

''சிவாய எனும் நாமம் ஒருகாலும் நினையாத திமிராகரனைவாவென் றழையாதே''
—திருப்புகழ்.

ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம்—ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீர் ஐந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாய் ஓரிரண்டோ டாய்ந்து.

ந—திரோதமலம்
ம—ஆணவமலம்
சி—சிவம்
வ—திருவருள்
ய—ஆன்மா

RangaRakes
tamilnavarasam.com

ஆன்ம எழுத்துய ஈரைந்து பத்து
தமிழ் கணக்கில் பத்து—ய

இந்த யகரத்தை அபரம்—பின், சிகரத்துக்கும் வகரத்துக்கும் பின் வைத்து சிவய என்று ஓதுவார்களானால்

**''ஆவியீரைந்தை அகற்றலாம்''**

ஈரைந்து—பத்து; பத்து என்ற சொல்லை ஆவி என்ற எழுத்துக்களுடன் சேர்க்கவேண்டும்.

ஆ என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச்சேர்க்க-ஆபத்து. வி என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க —விபத்து

ஆபத்து—உடலுக்கு வருந்துயர்
விபத்து—உயிருக்கு வருந்துயர்
உடலுக்கு வருந்துயர்கள் பசி பிணி முதலியன.
உயிருக்கு வருந்துயர்கள் பிறப்பு இறப்பு என்பன.

இந்த ஆபத்து, விபத்து என்ற இருவகைத்துயரங்களும் சிவாய என்று ஓதுவார்க்கு உண்டாகமாட்டா.

**ஆவியீர் ஐந்து அறலாம்:**

ஆணவம், கன்மம், மாயை, திரோதம், மாயேயம் என்ற பஞ்ச மலங்களும் அறும்.

**ஆவியீர் ஐந்து உறலாம்:**

ஆவியீர்! விளி. உயிர் போன்றவர்களே! நிவர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்ற பஞ்சகதாமயமும் உண்டாகும்.

**ஆவியீர் ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து:**

ஆவி—பிராணவாயு

ஈரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்து இடலாம் வெளியே அவமேகழிகின்ற பன்னிரு அங்குலம் பிராணவாயு அவ்வாறு கழியாது உள்ளே மீளும்.



இன்னும் ஒருமுறை அப்பாடலைச் சிந்திப்போம்.

ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம்—ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீ ரைந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து.

என்ன அற்புதமான செய்யுள்? எத்தனை ஆழமான செம்பொருள்கள்? ஆதலால் ஐந்தெழுத்தைச் சிந்திப்போமானால் துயர்கள் சிந்திப்போம்.

தனியிழையை எளிதில் அறுத்து விடலாம், இருபத்தையாயிரம் இழைகளைக்கூட்டி முறுக்கி விட்டால் அக்கயிற்றால் தேரை இழுத்துவிடலாம். அதுபோல் பல லட்சம் முறை மந்திர ஜெபம் கூடுமானால் இறைவனைத் தெரிசித்து விடலாம்.

96 கோடி ராமமந்திர ஜெபத்தால் தியாகராஜ சுவாமிகள் ஸ்ரீராமரை நேரில் தெரிசித்தார். அண்மையில் வாழ்ந்த உண்மைத்துறவியாகிய பாம்பனடிகள் 36 நாள் பாம்பன் வலசையில் மயானத்தில் குழிவெட்டிக்கொண்டு, அக்குழியிலிருந்து இடையறாது சடாக்ர மந்திரத்தைச் செபித்து இளம் பூர்ணனை நேரில்கண்டு தெரிசிக்கப் பெற்றார்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவது போல் இடையறாது தியானஞ் செய்தால் எம்பெருமான் வெளிப்படுவான்.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.
—அப்பர் பெருமான்

உடம்பை உயிர் செலுத்துகின்றது; உயிரை இறைவன் செலுத்துகின்றான்.

காரை டிரைவர் செலுத்துகின்றான். டிரைவரை எஜமான் செலுத்துகின்றான் என்பது போல் உணர்க.

உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை; டயருக்குள் ட்யூப்; ட்யூப்புக்குள் காற்று.

RangaRakes
tamilnavarasam.com

இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக எண்ணினால் உள்ளம் உருகும்; அன்பினால் என்பும் உருகும். முடிவில் உயிர் உருகும் உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றிவிடும்.

அரக்கின் இடையில் தங்கம்; தங்கத்தின் இடையில் இரத்தினமணி.

அரக்கு உருகினால் தங்கம் உருகும்; தங்கம் உருகினால் மணி அதில் பதிந்துவிடும். அதுபோல் உள்ளம் உருகி, உயிர் உருகி, சிவத்துடன் ஒன்றுபடவேண்டும்.

நம் உள்ளமே உருகவில்லையானால் உயிர் எவ்வாறு உருகும்? இறையுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும்?

ஆதலால் அன்பைப்பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி இறையுடன் கலந்து இன்புறுவதுவே சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாம்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்!
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவஎண் குணபஞ் சரனே!
என்று அனுபூதி இதனை நமக்கு உணர்த்துகின்றது.

உணவு தேடுகின்ற நாம் உணர்வுந்தேட வேண்டும்.

நித்த அநித்த வேறுபாடுகளை உணர்வதுதான் உணர்வுடைமைக்கு அழகாகும்.

நேற்றிருந்தார் இன்றில்லை.

மகாபாரதத்தில் யட்சப் பிரச்சினை என்று ஒன்று உளது. அது மிக மிக அருமையானது. யட்சமூர்த்தி தருமரைப்பார்த்து வினவுகின்றார், "தருமா! உலகிலே ஆச்சர்யமானது எது"?

தருமர் 'தினந்தோறும் இறக்கின்றவர்களைக் கண்டும் தனக்கு மரணம் இல்லையென்று எண்ணுகின்றானே! அது தான் பெரிய ஆச்சர்யம்" என்றார்.

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேல் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணை செய்யாவிடில்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ
என்று தயரதர் கூறுகின்றார்.

ஆதலால் மரணம் வருமுன் இறைவன் சரணத்தை வழிபட்டு நலம்பெற வேண்டும்.



இதுகாறும் கூறியவற்றால், முப்பொருள் உண்மையும் இறைவன் தந்த அரிய பிறப்பு மனிதப் பிறப்பு என்பதும் இப்பிறப்பினால் இனிவொரு பிறப்பு எடுக்காத வகையில் நாம் இறைவனுடன் ஒன்றி சிவாத்துவிதம் பெற வேண்டும் என்பதும், அதற்குரிய நெறி அன்பினால் உருகுவது என்பதும், ஐந்தெழுத்தை ஓதி உய்யவேண்டும் என்பதும் மரணம் நேருமுன் சரணம்பெற வேண்டும் என்பதும் தெரியப்பெற்றோம்.

# 4. மானம்

மானம் என்ற ஒரு சிறந்த பண்பு தமிழகத்திலே தலை சிறந்து விளங்குவது. மானம் என்ற ஓரதிகாரமே வகுத்துள்ளார் திருவள்ளுவர். கைபோய் வாழலாம், கால்போய் வாழலாம், காதுபோய் வாழலாம், கண்போய் வாழலாம், பல்போய் வாழலாம், செல்வம் போய் வாழலாம், மனைவிபோய் வாழலாம், மக்கள்போய் வாழலாம் ஆனால் உயிர்போய் வாழமுடியுமா ? முடியாது. எனவே மனைவி, மக்கள், வீடு, நிலம், புலம் கண், காது, கை, கால் இன்னோரன்ன பிற எல்லாவற்றிலும் உயர்ந்தது, சிறந்தது உயிர்.

உயர்ந்த பொருளை உள்ளே மறைமுகமாக வைப்பார்கள். நமது வீடுகளில் மேஜை, நாற்காலி ஆகியவைகள் வெளியே உள்ளன. மேஜைமீது மைப்புட்டி பேனா ரூல்கழி இவைகள் எல்லாம் வெளியே இருக்கும். விலையுயர்ந்த முத்து, ரத்தினம், தங்கம், நோட்டு இவைகள் உள்ளே இருக்கும். மேஜை மீது நோட்டுகளை வைத்தால் வருகின்ற வரும் போகின்றவரும் எடுத்துகொண்டு கம்பி நீட்டி விடுவார்கள். ஆதலால் உயர்ந்த பொருளை உள்ளே வைக்கின்றோம்.

**உயிரை உள்ளே வைத்தார் :-**

அதுபோல் கை, கால், மூக்கு, காது இவைகளை வெளியே வைத்த கடவுள் எல்லாவற்றிலும் சிறந்த உயிரை உள்ளே வைத்தார். காது, மூக்கு மாதிரி உயிரை வெளியே வைத்திருந்தால் தேர்தலில் ஒருவன் நிற்க முடியுமா ? இவருக்குப் போட்டியாக நின்றவன் பின்புறமாக வந்து முந்திரிக்கொட்டையைத் திருடுகின்ற மாதிரி உயிரைத் திருகி எடுத்துக்கொண்டு போய் விடுவான்.

RangaRakes
tamilnavarasam.com

இறைவனுக்கு உயிரின் அருமை தெரியும். அரிய உயிரை உள்ளே வைத்தார். அவருடைய கருணை, நாம் உயிருடன் வாழ வேண்டுமென்பது. இத்தகைய பெருமையும் அருமையும், படைத்த உயிரினும் மானம் பெரிது என்கிறார் திருவள்ளுவர்.

**“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்”** — **குறள்**

கவரிமான் தன் உடம்பில் உள்ள உரோமம் விழுந்தால் உயிரை விட்டுவிடும். அதுபோல் மானிகள் மானம் போனால் உயிரை விட்டுவிடுவார்கள்.

“மானம் இழந்தபின் வாழாமை முன்இனிது” இனியவை நற்பது. மானத்தை மதித்து வானத்தையும் மதியாத மதியுடையோர் நம் தமிழகத்தில் பலர் வாழ்ந்தார்கள். வடக்கே இந்தமான உணர்ச்சி அருகியிருந்தது. அதற்குச் சான்று இந்த வரலாறு.

பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் அதி அற்புதமான நவரத்தினங்களைப் பதித்துப்பொன்மயமான ஒரு மணிமண்டபம் புதுக்கியிருந்தார்கள். அர்ச்சுனனால் காண்டவ தகனத்தில் உயிர்பெற்ற ஒரு அசுரத்தச்சன் விருவுபர்வா என்ற அசுர மன்னன் இமயச்சுனையில் இட்டிருந்த நவரத்தினங்களைப் பொதி மாடுகள் கோவேறு கழுதைகள் மீது கொணர்ந்து அம்மாமண்டபத்தைப் பல சிற்பிகளைத் துணையாகக்கொண்டு சிந்தனைக்கும் எட்டாத வேலைப்பாடுகள் நிறைந்தனவாய் பதினான்கு மாதங்களில் கட்டி முடித்தான்.

**இராச சூயம்** வேள்வி முடிந்தபின் துரியோதனன் தன் பரிவாரங்கள் புடைசூழ அம்மணி மண்டபத்தைக் காண வந்தான்.

குளத்தில் இறங்கினான் : குளம் இல்லை.

அம்மண்டபத்தின் முன்கட்டின் மேல் தளவரிசையில் தாமரைக் குளத்தை நவமணியால் சிற்பி சித்திரித்தான். நீல மணியால் தண்ணீரையும், பச்சை மரகதத்தால் தாமரை இலைகளையும், கோமேதகத்தால் தாமரை மலரையும் வைர வைடூரியங்களால் அன்னங்களையும் புஷ்பராகத்தால் படிகளையும் பவளம் முத்து இவைகளால் வேறுபல மலர்களையும் அமைத்து, தாமரை தடாகத்தை அமைத்தான் கீழே பளிங்குக்கல் தளவரிசை அப்பளிங்கின் மீது மேலேயுள்ள தாமரைத்தடாகம் தெரிந்தது வடநாட்டு மன்னன் துரியோதனன் அதைக்கண்டு “தம்பிகளே !



மண்டபம் புதுக்கியவனுக்கு மதியுளதா ? வழியில் குளத்தை வெட்டியுள்ளானே மடையன் என்று மண்டபத்தைப் புதுக்கிய சிற்பியையும் புதுப்பித்த பாண்டவர்களையும் அவமதித்து குளத்தின் நீரினால் வேட்டி நனைந்து போகும் என்று கருதி, உடையை இடைவரை தூக்கிக் கொண்டான் குளத்தில் இறங்கினான் குளம் இல்லை. எல்லோரும் சிரித்தார்கள் “குளம் இல்லாத இடத்தில் குளம் என்று கருதி உடையை இடைவரை உயர்த்திக் கொண்டானே” என்று கூறி எள்ளி நகையாடினார்கள்.

அடுத்த கட்டில் உண்மையிலேயே குளத்தை அமைத்து வழியை இருபுறத்தும் பிரித்து விட்டிருந்தான் சிற்பி, துரியோதனன் “தம்பியீர் ! இது குளம் அன்று-இதுஏதோ கண் கட்டு வித்தை, மாயாஜாலம் நாம் அறிவுடையவர்கள் ஏமாந்து போகக் கூடாது” என்று கூறிக்கொண்டே வேகமாகச் சென்று குளத்தில் விழுந்தான்.

### இதுதான் வடநாட்டு வரலாறு

இனித்தென்னாட்டு வரலாறு ஒன்றைக் காட்டுகிறேன். மூவேந்தரும் எண் திக்கும் மதிக்கும் பெரிய தனமும் மனமும் படைத்தவர் சடையப்ப வள்ளல். கம்பரையும் பல புலவர்களையும் காத்தருளிய கருணைக்கடல் அவர். அவர் வீட்டில் ‘அன்று களைந்த கழுநீர் ஆயிரம் வேலிபாயும்’ என்பது பழமொழி அத்துணைப் பெரிய அன்ன தாதா அவர்.

சேர, சோழ, பாண்டியன் என்ற மூவேந்தரும் சில சமயத்தில் அவரிடம் கடன் பெறுவார்கள்; அதனால் அவர் ‘திரிகர்த்தராயர்’ எனப்பேர் பெற்றார். மழையென்று ஆசங்கை கொள்ளுமாறு இரவலர்க்குப்பொன் சொரியும் வள்ளற்பெருமான் அவர். அவரை நாடிவந்த வறியவன் குபேரனைப்போல் திரும்புவான். பசியால் வாடிய இலங்கைக்கு ஆயிரம் கப்பல்களில் இனாமாக நெல் அனுப்பி பஞ்சந்தீர்த்த பரமதயாசீலர் அவர்.

சடையப்ப முதலியார் சோழ மன்னன்பால் கௌரவ அமைச்சராயும் இருந்தார். அவரது தொடையில் சிலந்தி எழுந்தது. அதுகாரணமாக வீட்டுடன் இருந்தார்.

விலையுயர்ந்த ஆடை கலிங்கத்தில் நெய்வார்கள். அதனால் இடவாகு பெயராக ஆடைக்கும் **கலிங்கம்** என்ற பேர் ஏற்பட்டது. கலிங்கத்திலிருந்து ஒரு நெசவாளி பல நாட்கள் நெய்த அழகிய சரிகைப்பூ வேலைகள் அமைந்த ஒரு பொன்னாடையைச் சந்தன மரப்பெட்டியில் வைத்துக் கொணர்ந்தான். சோழ மன்னனிடம் காட்டி இழை

RangaRakes
tamilnavarasam.com

ஒன்றுக்கு ஆயிரம் பொன் என்றான், அதை வாங்குமளவுக் குப்பொன் அப்போது இன்மையால் சோழவேந்தன் அந்த ஆடையை வாங்கவில்லை. விலைபோகாமல் கவலையோடு திரும்பினான். வழியில் சடையப்ப முதலியார் அவனைக் கண்டார்.

ஐயா ! நீர் எந்த ஊர் ? கலிங்கம்
உனக்கு என்ன கவலை ? உணவு வேண்டுமா ?
எனக்குச் சோற்றுக்குக் கவலையில்லை வேற்றுக் கவலை யுண்டு.
என்ன கவலை ?
அந்தக் கவலையைத் தீர்க்க உங்களால் ஆகாது.
அதற்கும் உங்களுக்கும் வெகுதூரம்.
என்னய்யா ? உன்குறையைக்கூறு என்னால் முடிந்த உதவியைத் தெய்வத்தின் திருவருளைக்கொண்டு முடிப்பேன்

சடையப்பருடைய எளிய தோற்றத்தைக் கண்டு அவரை அலட்சியமாக எண்ணிய கலிங்கன், சந்தன மரப் பெட்டியை எடுத்து அவர் முன்னே வைத்தான் பெட்டி யைத் திறந்தான் 'ஐயா ! கை தொடாமல் பாருங்கள் விலையுயர்ந்த வேட்டி, இழை ஒன்றுக்கு ஆயிரம் பொன்' என்றான்.

முதலியார் 'ப்பூ இவ்வளவுதானா ? நல்லது, சபாபதி இந்த இழைகளை எண்ணி, அத்தனை ஆயிரம் பொன் இவரிடம் தாமதமின்றிக் கொடுத்துவிடு' என்றார்.

பொன் தரப்பட்டது. வியாபாரி வியந்து நின்றான். அன்பரே ! ஒற்றைவேட்டி கட்டக்கூடாதே. இது போன்ற மற்றொரு வேட்டி இருக்கின்றதா ? என்றார் வள்ளல்.

கலிங்கன் மேலும் ஆச்சரியப்பட்டான். அம்மம்மா ! இவரைப் பார்த்தால் தோற்றத்தில் எளிமை தவழ்கின்றது அரசனும் வாங்கமுடியாத உயர்ந்த உடையை ஒரு விநாடி யில் தனத்தைத்தந்து வாங்கினார். இன்னும் உளதோ ? என்று வினவுகின்றார். 'எந்தப் புற்றில் என்ன பாம்பு இருக்குமோ ? என்ற பழமொழி இவரளவில் சரி' என்று எண்ணிப் புருவத்தை நெறித்து நின்றான்.

ஐயா ! இன்னும் எத்தனை ஆடைகள் தயார் ஆகின்ற னவோ, அத்தனையும் இங்குக்கொணர்ந்து கொடுத்துப் பணம் வாங்கிக்கொள் என்று அவனுக்கு அன்னமும் சொர்ணமும் வழங்கி வழியனுப்பினார்.

பின்னர் நான்கு நாட்களுக்குப்பின் நீராடி, அப்புதிய பொன்னாடையை இடையில் உடுத்திக்கொண்டு



சோழனுடைய பேரவையை அடைந்தார். முதலியாரை முடிமன்னன் வரவேற்றுச் சிறந்த ஆசனத்தில் இருத்தினான் தன்னால் வாங்க இயலாத அந்த உயர்ந்த உடையைத் தன் அமைச்சர் வாங்கி உடுத்தியிருப்பதைக் கண்டான்.

'முதலியார்வாள் ! உடை என்ன விலை ?
இழையொன்றுக்கு ஆயிரம் பொன்
மன்னருக்கு வேண்டுமாயின் கொண்டுவருமாறு கூறியுள்ளேன்
மன்னவன் அதிசயம் அடைந்தான்.
பல உடைவாங்கும் அளவுக்கு அவரிடம் தனம் குவிந் துள்ளது என்று கருதினான்.
எங்கே பத்துப் பதினைந்து நாட்களாகத் தாங்கள் நமது அரசவைக்கு வரவில்லையே ?
துடையில் சிலந்தி அதனால் வரஇயலவில்லை
அப்படியா ? சிலந்தி ஆறிவிட்டதா ?
ஆம் ஆறிவிட்டது. இன்னும் ஒரு துவரம்பருப்பு அளவு ஆறவேணும்
'ஓ ! எங்கே அதைக் காட்டுங்கள்' என்றான் சோழன்.

உடனே சடையப்பவள்ளல் விலையுயர்ந்த அந்த ஆடையை அப்படியே கிழித்தார். 'இதோ பாருங்கள் துடைப்புண்' என்றார். சோழமன்னன் திடுக்கிட்டான் ஆ ! ஆ ! என்ன இது ? இழையொன்றுக்கு ஆயிரம் பொன் விலையுள்ள உடையைக் கிழித்து விட்டீரே !

'மன்னரே ! இது அரசவை. உடையை உயர்த்தினால் மானம் அழியும் இந்த உடைபோல் ஆயிரம் வாங்கலாம். இழந்த மானத்தைத் திரும்பப் பெறமுடியாது. தமிழ் மகனுக்குத்தனம் பெரிதன்று மானம்பெரிது .' என்றார் சடையப்ப முதலியார்.

அந்த அரச சபையில் இருந்த அத்தனைபேரும் இந்த நிகழ்ச்சியைக்கண்டு கண் இமைக்காது பேராச்சரியம் உற்று அமர்ந்திருந்தார்கள். மன்னன், முதலியாருடைய மான உணர்ச்சியை மதித்தான், துதித்தான்.

நீரில் நனையும் என்று வடநாட்டு மன்னன் சபையில் உடையை உயர்த்தினான்.

துடைச் சிலந்தியைக்காட்ட உயர்ந்த உடையை கிழித்தார் தென்னாட்டுப் பெருமகன் ஆதலால் மானம் மிகச்சிறந்த பண்பு.

RangaRakes tamilnavarasam.com

# 5. விளக்கு

மனிதனுக்குத் துன்பஞ் செய்கின்றவை பல அவற்றுள் இருள் ஒன்று. இருளில் கட்டையா ? கள்வனு ? காலில் பட்டது சந்தனமா ? சாணமா ? அரவமா ? கயிரு ? என்று அறிந்துகொள்ள முடியாது இருளில் ஒருவேலையுஞ் செய்ய முடியாது. நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் திடீரென்று மின்சார விளககுகள் அணைந்து விட்டால் அப்படியே அத்தனைபேரும் அசைவற்று நிற்க நேர்கின்றது.

விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாதபோதுதான் உணர முடியும். தாய் நம்மை எப்படி எப்படி எப்படியெல்லாம் வளர்க்கின்றாள் என்பதைத் தாய் இல்லாதபோதுதானே உணர முடிகின்றது.

ஒரு வீட்டில் விளக்கு எரிந்தால் அந்த வீடு மங்களகரமாக இருக்கும். விளக்கின்றி இருள் சூழ்ந்தவீடு, பேய் நடமாடும் பாழ் நிலம்போல் இருக்கும்.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு எனவுணர்க. சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை என்ற நான்குமாகும். பகலில் பொருள்களை விளக்குவது கதிர், இரவிலே பொருள்களை விளக்குவது மதியுங்கனலும், இந்த மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

இரவிலே ஒரு காட்டில் இருளில் வழியுங் குழியும் தெரியாது ஒருவன் நின்று திகைக்கின்றான். அப்போது ஒரு புறத்தில் நாய் குரைத்தது அந்த ஒலியைக் கொண்டு மக்கள் வாழுவேண்டும் என்று தெரிந்து ஒலி வந்த வழியே போவான். அன்றியும் தவளைகள் கர கர வென்று கத்தும் ஒலியைக் கேட்டான். அங்கு நீர்நிலை என்று அறிகின்றான். ஆகவே கதிர் மதி விளக்கு என்ற மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்றுத் திகைக்கின்றபோது அங்கு யாரவது பேசினுல் அந்தக் குரலோசையைக் கண்டு இன்னுர் என்று விளங்கிக் கொள்ளுகின்றோம் அல்லவா ? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

> **''இல்லக விளக்கது இருள்கெடுப்பது**
> **சொல்லக விளக்கது சோதியுள்ளது''**
>
> — என்கிறுர் அப்பர் அடிகள்

சொல்லே விளக்காகத் தோன்றியருளிய ஒரு வரலாறும் உண்டு. நாராயணமூர்த்தியை மனமொழி மெய்களால் வழிபட்டு மகிழ்கின்றவர்களாக விளங்கிய ஆழ்வார்கள் மூவர்கள் முதலாழ்வார்கள் எனப்படுவார்கள். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், என்ற நாமங்களை யுடையவர்கள்.

நடுநாட்டில் திருக்கோவலூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. காரி முதலிய மன்னர்கள் இருந்து அரசு புரிந்த திருநகரம். அத்தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவிக்கும் பொருட்டுப் பொய்கையாழ்வார் சென்ருர். அத்திருக்கோயிலிலே நெடுநேரம் இறைவனை வணங்கிவிட்டு ஒரு சிறு இடத்தில சென்று படுத்து உறங்கிவிட்டார்.

நடு இரவு, குளிர்காலம், சிறு தூறல், வாடை வீசி உயிர்களை நடுக்கிக் கொண்டிருந்தது. பூதத்தாழ்வார் என்ற பெரியவர் அங்குவந்து மெல்ல ஒதுங்கினுர். படுத்திருந்த பொய்கையாழ்வார் பளிச்சென்று எழுந்து இந்த இடம் ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் ஆகும் என்று கூறி அவரை யருகில் இருக்கச் செய்து, தானும் இருந்தார். சிறிது நேரத்திற்குப்பின் அங்குப் பேயாழ்வார் வந்தார். அமர்ந்திருந்த இருவரும் உடனே எழுந்து இங்கு ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம், மூவர்நிற்கலாம்'' என்று கூறி நின்று கொண்டார்கள்.

அச்சிறு இடத்தில் மூவரும் நெருங்கி நின்ருர்கள் ஒரே அமைதி, சிறிது நேரத்திற்குப்பின் கன்னங் கரேல் என்று ஒருவர் மொழு மொழு என்ற உடம்புடன் வந்து அவர்களை நெருக்கிக்கொண்டு உட்புகுந்தார்.

அந்த இடம் மிக நெருக்கமான சிறு இடம். ஒருவர் மட்டும் படுக்கவும், இருவர் மட்டும் இருக்கவும், மூவர் மட்டுமே நிற்கவும் முடியும். இப்போது நான்வாவது ஒரு பேர்வழி வந்து நுழைந்து நெருக்கத் தொடங்கினுர் மூவரும் திக்கு முக்காடி விட்டார்கள். மூச்சு திணறியது. ஐயா ! நீர்யார்' என்று கேட்டார்கள். பதில் இல்லை. ஐயா தங்களை யார் என்று அறிய விரும்புகின்றோம்.'' ஒரே அமைதி. மௌனம்-நிலவியது.

விளக்கில்லாமல் எப்படி அவரை இன்னுர் என்று அறிய முடியும். உடனே பொய்கையாழ்வார் மொழி விளக்கு ஏற்றுகின்ருர். அது சிறு விளக்கா ? உலகில் உள்ள எல்லா விளக்கு கட்கும் பெரிய விளக்கு ஐந்து கண்டங்கட்கும் ஒளிதரக்கூடிய அத்துணைப்பெரிய விளக்கு.

அந்த விளக்குக்கு நெய் ஒருபடி இருபடிவிட்டாற் கட்டுமா? இந்தப் பூமியே-அகல்; கடலே-நெய்; மேருகிரி-திரி; சூரியனே-விளக்கு.

> **''வையந் தகளியா வார்க்கடலே நெய்யாக**
> **வெய்ய சுடரே விளக்காகச்-செய்ய**
> **சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
> **இடராழி நீங்குகவே என்று''**

என்று பாடினுர் பொய்கையாழ்வார் அடுத்தபடி, பூதத்தாழ்வார் உள்ளத்தில் ஒருவிளக்கு

RangaRakes
tamilnavarasam.com

ஏற்றுவாராயினர் அதற்கு அன்பு-அகல்; ஆர்வம்-நெய்; எண்ணம்-திரி; ஞானமே-விளக்கு.

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்''

இவர்கள் இருவரும் பாடியபின் ஒரு சோதி விளக்கு தோன்றியது. அவ்வொளியில் தம்மை நெருங்கியது யார் என்று மூவரும் பார்த்தார்கள். அவர் திருவுருவம் நன்கு தெரிகின்றது உடனே பாடுகின்றார் பேயாழ்வார்.

''திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்-செருக்கிளர்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்.
என்னாழி வண்ணன்பால் இன்று.''

இறைவனை யார்கண்டவர்? என்று சிலர் கேட்கிறார்கள் கண்டேன் கண்டேன் எனறு கூறுகின்றார் பேயாழ்வார் ஆ! ஆ! என்ன அழகு! இதோ எங்களை நெருக்கியது எம்பெருமானே!

''திருமார்பில் திகழ்கின்ற திருமகளைக் கண்டேன். அழகிய திருமேனியைக் கண்டேன்; விளங்குகின்ற கதிரவன் ஒளிபோன்ற அழகிய வடிவத்தை கண்டேன்; போரில் திகழ்கின்ற அழகிய சக்ராயுதத்தைக் கண்டேன். மற்றொரு கையில் அன்புள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கையும் கண்டேன் கடல் வண்ணனும் எம் கடவுள்பால் இன்று இத்தனையுங் கண்டேன்'' என்கிறார். எனவே இதனை மொழிவிளக்கு எனவுணர்க.

பாரதம் பாடிய வில்லிபுரத்தூராரின் திருமைந்தர் வரந்தருவார் பாடுகின்றார்.

''பாவருந் தமிழால் பேர்பெறு பனுவற்
பாவலர் பாதிநா ளிரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுதநன் னாடு
தேவரும் மறையும் இன்னமுங் காணச்
செஞ்சடைக் கடவுளைப்பாடி
ஏவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன் னாடு'' என்பது அது.

அகில வுலகங்களுக்கும் விளக்காக நின்று எல்லா வற்றையும் விளக்குகின்றவர் சிவபெருமான். அதனுல் அவரை விளக்கென்றே கூறுகின்றார் மணிவாசகர்

''சோதியே சுடரே சூழொளிவிளக்கே''
அது 'தூண்டா விளக்கு
''மாணிக்க மணி விளக்கு''

உலகெலாம் சிவமயம் ஓங்கட்டும்

RangaRakes tamilnavarasam.com